# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 61 — 1973 මැයි 25 වැනි සිකුරාදා — 1973.05.25

61 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மே மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் வெற்றிடம் .. .. | 483 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 492 |


**கவனிக்க.**—தாவரவியல் தோட்டங்கள் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு மே மாதம் 11 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ)விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.*

*5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.*

*6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) மூழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடன் அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியேகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்கள் அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்றும் பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(ii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு. அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையன கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும்! தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது:*

---

### உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

#### சட்டப் பணியாளர் பதவி

*உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சட்டப் பணியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் போன்ற விண்ணப்பங்கள் செயலாளர், நிதி அமைச்சு, செயலகம் கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பின்வரும் தேதிகளில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.*

*(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்—7 யூன், 1973*

*(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—14 யூன், 1973*

*குறிப்பு.—1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது போன்றில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*2. விண்ணப்பப் படிவம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதிவரை பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.*

*3. வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை விதிக்கப்பட்ட காலத்திற்கிடையில் அனுப்பவிரும்பின், தாம் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் பணிமனைக்கு செயலாளர், நிதி அமைச்சு, செயலகம் கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.*

*4. **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கைப் பணியாளர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாயிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் தாமாகச் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவுகளையும் சம்பந்தப்பட்ட பணியாளர்களே செலுத்த வேண்டும்.*

*2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது, ஆயின் ஓய்வூதியமற்றதாகும். அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை அளிக்கப்பட வேண்டும். நியமனம் மூன்றாண்டுக் காலத்திற்குத் தகுதிகாண் முறையில் இருக்கும்; ஏற்கெனவே ஓய்வூதிய உரிமைகளுக்கு உரித்துடையவராயுள்ள பணியாளர்கள் தொடர்ந்தும் இவ்வுரிமைகளை அனுபவிக்கலாம்.*

*3. **சம்பளமும் விடுதொகையும்.**—இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு ஆண்டொன்றுக்கு 11,040 ரூபாவிலிருந்து 17,640 ரூபா வரை 480 ரூபா வீதம் 10 ஆண்டுகளும் 600 ரூபா வீதம் 3 ஆண்டுகளும் சம்பள ஏற்றம் உடையதாகும். (14,400 ரூபாவிற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு).*

*குறிப்பு.—வினைத்திறமைகாண் தடைக்குமேல் பணியாளர் உயர்த்தப்படுவதற்கு முன்னர் பொதுவருமான வரிச்சட்டத்திலும் ஆளுக்குரிய வரிச்சட்டத்திலுமான திணைக்களப் பரீட்சை ஒன்றில் அவர் சித்தியெய்தல் வேண்டும். இப்பரீட்சைக்கான பாடத்திட்டம், உதவி, வரிமதிப்பாளர்களுக்கான 2 ஆவது திணைக்களப் பரீட்சைக்கு விதிக்கப்பட்டது போன்றதாகும்.*

*4. **தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தாம்—*

*(அ) நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவரென்பதற்கும்;*

*(ஆ) 7.6.1973 ஆந் தேதியில் 22 வயதிற்குக் குறையாததும் 35 வயதிற்கு மேற்படாததுமான வயதுடையவரென்பதற்கும் (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை வேண்டியதில்லை);*

*(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் கழகமொன்றின் சட்டத்துறைப் பட்டதாரி என்பதற்கும்;*

*(ஈ) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையிற் சித்தியடைந்தவரென்பதற்கும் திருப்தியான சான்று அளித்தல் வேண்டும்.*

*5. அபேட்சகர்கள் பின்வரும் ஆவணங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் போது சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(அ) பிறப்புச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு—சமயகீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு** வழகப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது)*

*(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்ல மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்;*

*(இ) குணச் சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருக்க வேண்டும்;*

*(ஈ) உயர்தொழில் தகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர்தொழில் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்;*

*(உ) சிங்களத்திற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.*

குறிப்பு.—1. ஆவணங்களையாயினும் ஆவணங்களின் படிகளை யாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

2. ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும்பொழுது அவ்வாறு செய்யத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரச சேவையிலுள்ள பணியாளர்களின் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை தொடர்பான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், நிதி அமைச்சு, என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இவ்வமைச்சிலுள்ள எப்பணியாளருக் காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக் குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இச்செய்திமடலில் I ஆம் பாகம், (IIஅ) ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப் பட்டுள ; அவற்றைப் பார்க்க.

சீ. ஏ. குறே,
செயலாளர்,
நிதியமைச்சு.

நிதியமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1,
1973, மே மாதம் 7 ஆந் தேதி.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

சட்டப் பணியாளர் பதவிக்கான விண்ணப்பம்

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

**குறிப்பு.**—விண்ணப்பத்தைக் கொண்ட அஞ்சல் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்டப் பணியாளர் பதவிக்கான விண்ணப்பம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்" எனக் குறிப் பிட்டு, செயலாளர், நிதி அமைச்சு, செயலகம், கொழும்பு 1, என்ற முகவரிக்குப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படல் வேண்டும்.

1. முழுப் பெயர் (பெரிய எழுத்தில்) :————.

2. அஞ்சல் முகவரி :————.
(முகவரியின் மாற்றமும் உடனடியாக அறிவிக்கப் படல் வேண்டும்).

3. (அ) பிறந்த தேதி—வருடம் :————. மாதம்————. நாள் :————.

(ஆ) விண்ணப்ப முடிவுத் தேதியில் சரியான வயது—வருடம் :————. மாதம் :————. நாள் :————.

4. இலங்கைத் தேசிய இனம் வம்சாவழியிலா அல்லது பதிவு மூலமா எனக்குறிப்பிடுக (பதிவு மூலமாயின் விவரங் களைத் தருக) : ————.

5. பிறந்த இடம்—

(அ) விண்ணப்பதாரர் :————.

(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.

(இ) விண்ணப்பதாரரின் பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பதாரரின் பூட்டன் :————.

6. (அ) பால் :————.

(ஆ) திருமணமானவரா, தனியாளா, விதவையா அல்லது மனைவியை இழந்தவரா எனக் குறிப்பிடுக :————.

7. பின்வரும் பாடங்களிற் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை—

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

(இ) ஆங்கிலம் :————.

8. 12 வயதிற்குப் பின்னர் நீர் கல்வி கற்ற பாடசாலைகள், கல் லூரிகள், ஏனைய நிறுவனங்கள்—

| பொதுக்கல்வி பாடசாலை/கல்லூரி | தொடக்கம் | வரை |
|---|---|---|
| 1. ————. | | |
| 2. ————. | | |
| 3. ————. | | |

| உயர் தொழில் கல்வி நிறுவனம் | தொடக்கம் | வரை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

9. நீர் கடன்முடை அற்றவரா ? :————.
இல்லையெனில், கடன் பொறுப்புக்களின் தொகை என்ன வென்பதைக் குறிப்பிடுக :————.

10. சட்ட நீதி மன்றத்தில் ஏதாவது குற்றவியல் தவறிற்குக் குற்றப்பணம் சாட்டப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் வழக்கு இலக்கத்தைக் குறிப்பிட்டு தேதிகளுடன் முழு விபரங் களையும் தருக :————.

11. பாடசாலைக் கல்வி, உயர்தொழில் கல்வி, தொழினுட்பக் கல் வித் தகைமைகள் :————.
(பல்கலைக்கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உயர் தொழில் கல்வி/தொழினுட்பக் கல்வித் தகைமைகள் முதலியன, விசேட வகுப்புப் பெற்றுள்ளீராயின், தோற் றிய பாடங்கள், நிறுவனங்களின் பெயர்கள் என்பன வற்றைத் தேதியுடன் தருக)

12. தற்போதைய தொழிலும் முன்னைய நியமனங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றின் விவரங்களும் :—

| பதவி | தொடக்கம் | வரை | ஆண்டுச்சம்பளம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய, காரணம் கீழேயுள்ள 13 ஆம் நிரப்புப் பிரிவிற் குறிப்பிடப்படல் வேண்டும்)

13. மேலும் வேறு விவரங்கள் :————.

14. குணநலம் பற்றிய சான்றிதழ்களை வழங்கிய இருவரின் பெயர்களும் அவர்களின் பதவிகளும் :————.

1.

2.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விவரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதனுள் அடங்கியிருக்கும் விவரங் கள் எவையேனும் பொய்யானவை அல்லது சரியற்றவை என்று காணப்படின், தெரிவு செய்யப்படு முன்னர் தகுதியற்றவனுக்கப் படுவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் சரியற்றவையெனக் கண்டுபிடிக்கப்படின், இழப்பீடு எதுவுமின்றிப் பதவி நீக்கஞ் செய் யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

(அபேட்சகர் அரச சேவையில் இருப்பின் திணைக்களத் தலைவரின் அறிக்கை).

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

தேதி :————.

5-414—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

## நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை

### ஊர்நீதிமன்றத் தலைவர் பதவி

ஊர்நீதிமன்றத் தலைவர் பதவிகள் ஆளின்மை இரண்டுக்கும் இனிமேலும் அவ்வப்போது ஏற்படும் ஆளின்மைகளுக்கும் நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபை தகுந்த சிங்கள அறிவுடைய சட்டவறிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருகின்றது.

*குறிப்பு.*—(i) இவ்வலுவலகத்திஞல் வழங்கப்படும் படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும். விதித்த விண்ணப்பப் படிவங்களை அஞ்சல் மூலம் அனுப்புமாறு விடுக்கப்படும் வேண்டுகோள்களுடன் சுய முகவரி இடப்பட்டதும் முத்திரை ஒட்டப்படாததுமான 9"×4" அளவுக்குக் குறையாததுமான கடிதவுறை ஒன்று அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பஞ் செய்பவர் அரசாங்க சேவையிலுள்ள ஓர் அலுவலரா இல்லையா என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் சம்பந்தமான கடிதமொன்று அஞ்சலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்பனபோன்ற முறைப்பாடுகள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

(iii) ஊர்நீதிமன்றத் தலைவர் பதவிக்கு நியமிப்பதற்காக நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையால் 1972 ஒக்டோபரில் நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. ஆனல் தமது விண்ணப்பங்களை மீண்டும் நியமனத்துக்காகப் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமெனும் விருப்பமுண்டாவென்பதை அறியத்தருதல் வேண்டும்.

2. *நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.*—இப்பதவி நிரந்தரமானதாகவும் நியமனம் சகாய நிதி அடிப்படையிலானதாகவும் இருக்கும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அவரது சம்பளத்தில் 6% தொகையை அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு வழங்குமாறு வேண்டப்படுவர். அரசாங்கம் 9% வழங்கும். நியமனம் மூன்ருண்டு காலத்தகுதிகாண் நிலையைக் கொண்டிருக்கும். இக்காலத்தில் ஓர் அலுவலர் க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான வேறெந்தப் பரீட்சையிலாவது சிங்களத்தில் திறமைச் சித்தியொன்றுக்குக் குறையாத கல்வித் தகைமையொன்றை ஏற்கனவே கொண்டிருந்தாலன்றி சிங்களத்தில் தேர்ச்சிச் சோதனையொன்றில் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

3. *சம்பளமும் படியும்.*—தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஆண்டொன்றுக்குத் திரட்டிய சம்பளமாக ரூபா 6,720 இல் ஆரம்பித்து ரூபா 11,040 வரை அதிகரிக்கக்கூடியதாக ரூபா 8,880 லும் ரூபா 9,960 லும் திறமைத் தடைகளுடன் ரூபா 360 ஐக் கொண்ட 12 ஆண்டுயர்ச்சிகளைப் பெற்றுக்கொள்வர்.

4. லீவுகளும் மற்றும் சேவை நிபந்தனைகளும் அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோருக்குப் பொருத்தமான பிரமாணங்களே நடைமுறையிலிருக்கும்.

5. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இத்தீவின் எப்பாகத்திலேனும் ஊர்நீதிமன்றத் தலைவராகக் கடமையாற்றக்கூடிய உடற்றகுதி உடையவரென மருத்துவச் சோதனையொன்றின் தேர்வுபெறுமாறு வேண்டப்படுவர்.

6. நியமனம் அமைச்சரவையிஞல் வழங்கப்படும்.

7. *தகைமைகள்.*—ஒவ்வொரு அபேட்சகரும் ஸ்ரீலங்கா பிரஜைகளிலொருவராகவும்,

(அ) ஒரு வழக்கறிஞராக அல்லது வழக்குரைஞராக.

(ஆ) 47 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

8. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்கள் எதையும் அல்லது அனைத்தையும் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்போது அவ்வாறு செய்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) ஆகக்கூடுதலான தாரதரப் பத்திரம், அத்துடன் ;

(இ) சிங்களத்திலும் தமிழிலும் ஆகக்கூடுதலான பரீட்சைத் தாரதரப் பத்திரம்.

9. அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

10. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத்தொடர்புகளும் நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபைச் செயலாளருக்கே முகவரியிடப்பட வேண்டுமேயன்றி வேறெந்த அலுவலரின் பெயருக்கும் அனுப்பப்படலாகாது.

11. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படும். 14 நாட்களுக்குள் விண்ணப்பம் கிடைத்தமை பற்றிய அறிவிப்பை விண்ணப்பதாரர் எவரும் பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் அதுபற்றி நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபைச் செயலாளருக்குத் தெரிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டுக்கமைய நடந்துகொள்ளத் தவறும் விண்ணப்பதாரர் தமது விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படுவதற்கான கோரிக்கை எதையும் இழந்தவராவர்.

12. நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையிஞல் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர் தமது சொந்தச் செலவிலேயே அப்பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

லயனல் சமரதுங்க.
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை.

நீதிச்சேவைகள் ஆலோசனை ஒழுக்காற்றுச் சபைகள்
அலுவலகம்,
தபாற் பெட்டி 573,
சி/52, கெப்பிட்டிப்பொல வீதி,
கொழும்பு 5.
8 மே, 1973.

5-660—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

---

## கல்வி அமைச்சு

### பட்டியல் உதவியாளர் பதவிகள்

கல்வி அமைச்சின் கிழுள்ள பாடசாலைகளிலும் பல்தொழில்நுட்ப நிலையங்களிலுமான பட்டியல் உதவியாளர் பதவிகளுககுக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைத் திருப்தி செய்யும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறைக்கு அமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் " செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " பட்டியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்—பொ. நி. 30 " எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :—**

2. (i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்தற்றவையுமாகும். அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், அரசகரும மொழிக் கொள்கையின் பொருட்டு புதிய முறைப்படி நியமிக்கப்படுவாராயின், தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும் ;

(iii) அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின், விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் கடமை புரிபவராக அவர் நியமிக்கப்படுவார் ;

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இத்தூவீபத்தின் எப்பகுதியிலும் சேவை புரிய வேண்டும் ;

(v) ஆட்சேர்ப்பு, நேர்முகப் பரீட்சை ஒன்று மூலம் நடைபெறும்.

**3. சம்பளமும் படிகளும் :—**

இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம்—ரூ. 3,000—24 × 90—5,160—வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 20 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(ஆ) 3 திறமைச் சித்திகளுடன் சி.பா.த.ப. பரீட்சையில் அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி அத்தோற்றத்தில்/தோற்றங்களில் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் க.பொ.த. (சா.த) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். இதனுடன் இலங்கை நூலகச் சங்கத்தின் ஆரம்பப் பரீட்சையில் அல்லது அங்கிகரிக்கப்பட்ட சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்கு பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனினும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ் வமைச்சுக்கு நேரே அனுப்பவேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் ;—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள் ;

(இ) உயர்தொழில் தராதரப் பத்திரங்கள் ;

(ஈ) விண்ணப்பதாரியின் தகமைகள், ஒழுக்கம், இப்பதவி நியமிக்கப்படுவதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் இரண்டு சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள் (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்படத் தேவையில்லை) ;

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியோக விலாசத்திற்கே அனுப்பப்பட வேண்டும். எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8 அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II, ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன, அவற்றைப் பார்க்க

9 சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள் அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்கவேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

பி. உடகம,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2.
1973 ம் ஆண்டு மே மீ 15 ந் உ.

**(விண்ணப்ப மாதிரிப் படிவம்)**

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத் தாளில் தயாரிககப்படவேண்டியது)

**பட்டியல் உதவியாளர் பதவிகள்**

1. பெயர் (முதலெழுத்துககளுடன்) : திரு/திருமதி/செல்வி :————.
2. முழுப்பெயர் :————.
3. உத்தியோக முகவரி :————.
4. சொந்த முகவரி :————.
5. (அ) இலங்கையரா? :————.
 (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா, பதிவு காரணமாகவா? :————.
6. சாதியம் :————.
7. விவாகம் செய்தவரா, செய்யாதவரா? :————.
8. பிறந்த திகதி :————. வருடம் :————. மாதம் :————. நாள் :————.
 (விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி வயது :—. வரு :————. மா :————. நா :————.
9. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் :————.
 (அ) பதவி :————.
 (ஆ) நிரந்தரமா தற்காலிகமா? :————.
 (இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா? :————.
 (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றீரா? ;————.
 (உ) திணைக்களம் :————.
 (ஊ) நிலையம்/வேலை இடம் :————.
 (எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் :————.
 (ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி :————.
10. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள்—

| | பரீட்சை | வருடம் | போதனுமொழி | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | ........................ | ............ | ............ | ............ |
| 2. | ........................ | ............ | ............ | ............ |
| 3. | ........................ | ............ | ............ | ............ |

11. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள்—

| | தராதரப் பத்திரம் | வழங்கியவர் (நிலையத்தின் பெயரைக் கொடுக்க) | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | .................... | .................... | .............. | .............. |
| 2. | .................... | .................... | .............. | .............. |
| 3. | .................... | .................... | .............. | .............. |
| 4. | .................... | .................... | .............. | .............. |
| 5. | .................... | .................... | .............. | .............. |

12. நூலகராகப் பெற்றுள்ள அனுபவம், யாதேனும் இருப்பின்—

| | நிலையம் | திணைக்களம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | .................... | .................... | .............. | .............. |
| 2. | .................... | .................... | .............. | .............. |
| 3. | .................... | .................... | .............. | .............. |
| 4. | .................... | .................... | .............. | .............. |
| 5. | .................... | .................... | .............. | .............. |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுக்கப்படவேண்டியது)—

| | திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|---|
| 1. | .................... | .............. | .......... | .......... | .......... | .......... |
| 2. | .................... | .............. | .......... | .......... | .......... | .......... |
| 3. | .................... | .............. | .......... | .......... | .......... | .......... |
| 4. | .................... | .............. | .......... | .......... | .......... | .......... |
| 5. | .................... | .............. | .......... | .......... | .......... | .......... |
| 6. | .................... | .............. | .......... | .......... | .......... | .......... |
| 7. | .................... | .............. | .......... | .......... | .......... | .......... |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா :————.
(அங்ஙனமாயின், விபரங்கள் கொடுக்கவும்)

15. விண்ணப்பத்தாரி அரசாங்க அல்லது யாதேனும் கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா? :————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு? :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திராவேன் என அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

5–664—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

## லொறி சாரதிகள் பதவிகள்

### அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

கீழே கொடுக்கப்பட்ட தகைமைகளையுடைய கீழ்ப்பணியாளரிடமிருந்து பொறியியல் பிரிவில் லொறி சாரதிகள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில், தரப்பட்டுள்ள மாதிரி படிவத்துக்கு ஏற்ப தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள், அவரவர் மேற்பார்வை உத்தியோகத்தர் மூலம், பிரதான தந்திப் பொறியியலாளர் அலுவலகத்தில் 09.06.1973 ம் திகதியன்றோ, அதற்கு முன்போ கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—வருடத்துக்கு ரூபா 3,120—14×60—3,960.

3. **வயதுக்கட்டுப்பாடு.**—விண்ணப்பகாரர் 25 வயதுக்கும் 09.06.1973 ல் 45 வயதுக்கும் உட்பட்டவராயிருக்க வேண்டும்.

4. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :—**

(அ) விண்ணப்பகாரர் 7 ம் வகுப்பில் சித்தியடைந்தவராயிருக்க வேண்டும்.

(ஆ) எல்லா விதமான வாகனங்களையும் ஓட்டுவதற்குரிய உத்தரவுப் பத்திரத்தையும் (லைசென்ஸ்) வாகனங்களை ஓட்டுவதில் இரண்டு வருட அநுபவத்தையுமுடையவராயிருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் நல்ல உடலமைப்பு உடையவராயிருக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பகாரர் தமது தகைமை சார்பாக தெளிவான சான்றிதழ் ஒன்றை உடையவராயிருக்க வேண்டும்.

(உ) மோட்டார்ப் பொறிநுட்பத் துறையில் ஆரம்ப அறிவிருந்தால் அது மேலதிகமான தகைமையாகும்.

5. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு சமூகந்தர வேண்டும். அத்துடன் அவர்களுக்கு வாகனங்களை ஓட்டுவதிலுள்ள திறமையும் பரீட்சிக்கப்படும். பரீட்சைக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரருக்கு பரீட்சை நடத்தப்படும் திகதியும் நேரமும் அறிவிக்கப்படும். இது சம்பந்தமான எந்தவிதமான பயணச் செலவும் தரப்படமாட்டாது.

6. ஏனைய திணைக்களங்களிலிருந்தும் கூட்டுத் தாபனங்களிலிருந்தும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அவரவர்க்குரிய திணைக்களங்களினதும் கூட்டுத்தாபனங்களினதும் தலைவர்களுக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

7. மேற்படி தேவைகளுடன் இணங்காத விண்ணப்பகாரரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஏச். டி. எஸ். ஏ. குணவர்த்தன,
பிரதான தந்திப் பொறியியலாளர்.

அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமையகம்,
கொழும்பு 1.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

பொறியியல் பிரிவிலே லொறி சாரதிகள் பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரது முழுப்பெயர் :————.
2. உத்தியோக விலாசம் :————.
3. பிறந்த திகதி :————.
4. 1973 ம் ஆண்டு ஜூன் மாதம் 09 ந் திகதியன்று உள்ள சரியான வயது :
——— வருடங்கள், ——— மாதங்கள், ——— நாட்கள்.
5. கல்வித் தகைமைகள் :————.
6. முதல் நியமனத்தின் திகதி :————.
தற்போதைய தரம் உலோக டிக்கட்டின் இலக்கம் :———.
7. எல்லா விதமான வாகனங்களையும் ஓட்டுவதற்கு உரிய பத்திரத்தை (லைசென்ஸ்) உடையவரா? உடையவரெனின், பத்திரத்தின் இலக்கத்தையும் அது செல்லுபடியாகும் கால வரையறையும் தருக :————.
8. குற்றமில்லாத தகைமை பத்திரத்தை உடையவரா :————.

மேற்படி பிரகடனம் சரியானது என உறுதிப்படுத்துகிறேன்.

————.
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :————.

5-600—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

### பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தேவையெனக் கருதப்படும் தகுதிகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து கீழ்க்கையொப்பமிடுபவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. அச்சுத்துண்டக்கலைஞர்**

(அச்சுத்தொழிலின் ' அ ' பிரிவைச் சேர்ந்தது)

1. **சம்பள விகிதம் :** ரூபா 400/- 10×15—ரூபா 550/- (மாத மொன்றிற்கு எல்லாமுட்பட)
2. **வயதெல்லை :** 25 முதல் 40 வரை
3. **கல்வி, தொழினுட்பத் தகைமைகளும் அனுபவமும் மற்றும் தேவைகளும் :** I. சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும், அச்சுத் துண்டக் கலைஞர் பதவியில் 5 வருட அனுபவம் பெற்றவரும்.

அல்லது

II. க. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும், அச்சுத்துண்டக் கலைஞர் பதவியில் 10 வருட அனுபவம் பெற்றவருமான ஒருவராக இருத்தல் வேண்டும்.

**2. சிலைப்பதிவுப்பொறி பேணுவோர்**

(அச்சுத் தொழிலின் ' அ ' பிரிவைச் சேர்ந்தது)

1. **சம்பள விகிதம் :** ரூபா 400/- 10×15—ரூபா 550/- (மாத மொன்றிற்கு எல்லாமுட்பட)
2. **வயதெல்லை :** 25 முதல் 40 வரை.
3. **கல்வி, தொழினுட்பத் தகைமைகளும் அனுபவமும் மற்றும் தேவைகளும் :** I. சி.பா.த.ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும் சிலைப்பதிவுப் பொறி பேணும் தொழிலில் 5 வருட அனுபவம் பெற்றவரும்

அல்லது

II. க. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும் சிலைப்பதிவுப் பொறி பேணும் தொழிலில் 10 வருட அனுபவம் பெற்றவருமான ஒருவராயிருத்தல் வேண்டும்.

**3. பிலிம்செட்டர் இயக்குநர்**

(அச்சுத் தொழிலின் ' அ ' பிரிவைச் சேர்ந்தது)

1. **சம்பள விகிதம் :** ரூபா 400/- 10×15—ரூபா 550/- (மாத மொன்றிற்கு எல்லாமுட்பட)
2. **வயதெல்லை :** 25 முதல் 40 வரை.
3. **கல்வி, தொழினுட்பத் தகைமைகளும் அனுபவமும் மற்றும் தேவைகளும் :** I. சி.பா.த.ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும், பிலிம் செட்டர் இயக்குநர் பதவியில் 5 வருட அனுபவம் பெற்றவரும்

அல்லது

II. க. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும் பிலிம் செட்டர் இயக்குநர் பதவியில் 10 வருட அனுபவம் பெற்றுள்ளவருமான ஒருவராயிருத்தல் வேண்டும்.

**4. மொனோ தட்டச்சு இயக்குநர் (தமிழ்/ஆங்கிலம்)**

(அச்சுத் தொழிலின் ' அ ' பிரிவைச் சேர்ந்தது)

1. **சம்பள விகிதம் :** ரூபா 400/- 10×15—ரூபா 550/- (மாத மொன்றிற்கு எல்லாமுட்பட)
2. **வயதெல்லை :** 25 முதல் 40 வரை.
3. **கல்வி, தொழினுட்பத் தகைமைகளும் அனுபவமும் மற்றும் தேவைகளும் :** I. சி.பா.த.ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும் மொனோ தட்டச்சு இயக்குநர் பதவியில் 5 வருட அனுபவம் பெற்றவரும்

அல்லது

II. க. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும், மொனோ தட்டச்சு இயக்குநர் பதவியில் 10 வருட அனுபவம் பெற்றுள்ளவருமான ஒருவராயிருத்தல் வேண்டும்.

**5. அச்சு இயந்திரப் பொறிவலர்**

(அச்சுத் தொழிலின் ' அ ' பிரிவைச் சேர்ந்தது)

1. **சம்பள விகிதம் :** ரூபா 400/- 10×15—ரூபா 550/- (மாத மொன்றிற்கு எல்லாமுட்பட)
2. **வயதெல்லை :** 25 முதல் 40 வரை.
3. **கல்வி, தொழினுட்பத் தகைமைகளும் அனுபவமும் மற்றும் தேவைகளும் :** I. சி.பா.த.ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும், அச்சு இயந்திரப் பொறிவலர் பதவியில் 5 வருட அனுபவம் பெற்றவரும்

அல்லது

II. க. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும் அச்சு இயந்திரப் பொறிவலர் பதவியில் 10 வருட அனுபவம் பெற்றுள்ளவருமான ஒருவராயிருத்தல் வேண்டும்.

**6. பிளேடன் இயந்திர இயக்குநர்**

(அச்சுத் தொழிலின் ' ஆ ' பிரிவைச் சேர்ந்தது)

1. **சம்பள விகிதம் :** ரூபா 380/- 8×15—ரூபா 500/- (மாத மொன்றிற்கு எல்லாமுட்பட)
2. **வயதெல்லை :** 25 முதல் 40 வரை.
3. **கல்வி, தொழினுட்பத் தகைமைகளும் அனுபவமும் மற்றும் தேவைகளும் :** I. சி.பா.த.ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும் பிளேடன் இயந்திர இயக்குநர் பதவியில் 5 வருட அனுபவம் பெற்றவரும்

அல்லது

II. க. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தேறியவரும் பிளேடன் இயந்திர இயக்குநர் பதவியில் 10 வருட அனுபவம் பெற்றுள்ளவருமான ஒருவராயிருத்தல் வேண்டும்.

இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்ட கடிதவுறைகளில் 1973 ஜூன் மாதம் 11 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு, தலைவர் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 2பி டி. பொன்சேகா வீதி கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

நேர்முகமாக வருபவர்கள் விண்ணப்பப்படிவங்களை இக்காரியாலயத்தில் சாதாரண அலுவல் நேரங்களிலும் மற்றவர்கள் தமது விலாசமிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடிதவுறைகளை (அளவு 9″×4″) எனக்கனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

2பி, டி பொன்சேகா வீதி,
கொழும்பு 5,
1973.05.12.

தலைவர்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

5-632—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

---

## இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி

### புகையிரத முகவர் பதவி (போக்குவரவு)—யாகொடை

இத்திணைக்களத்தில் புகையிரத முகவர் (போக்குவரவு)—யாகொடை பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிகக் குறைந்த தரகாக ரூபா 160/- வழங்கப்படும். இந் நிலையம் பிரதான இருப்புப் பாதையில் கனையமுல்லை புகைவண்டி நிலையத்திற்கும் கம்பஹா புகையிரத நிலையத்திற்குமிடையில் அமைந்துள்ளது.

இம் முகவர் நிலையம் அமைந்திருக்கும் சுற்றுடலில் வசிக்கும் அல்லது கூறப்பட்ட அச் சுற்றுடலில் உரிமையளித்த நலன்களைக் கொண்டிருக்கும் ஆண்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்திலன்று 21 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றிய கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியும், எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது வர்த்தக கணிதமும் உட்பட குறைந்தது ஆறு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, மருதானை, கொழும்பு-10 என்னும் முகவரியிற் பெறக்கூடியதாகவுள்ள விண்ணப்பப்படிவங்களில் நிரப்பப்பட்டு 12.06.1973 ல் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக மேற்கூறப்பட்ட முகாமையாளரின் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களுக்காகிய கோரிக்கைகள் யாவும் முத்திரை இடப்படாததும், சொந்த முகவரியிடப்பட்டதுமான ஒரு கடிதவுறை (9″×4″) யுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும். இத்தகைய கோரிக்கைகளைக் கொண்டிருக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "புகையிரத முகவர் (போக்குவரவு)—யாகொடை பதவிக்காகிய விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் தேவைப்பட்ட விபரங்களைக் கூறப்பட்ட பொது முகாமையாளரது அலுவலகத்திலோ அல்லது அப் பிரதேசத்திலுள்ள பொது நிறுவனங்களிற் காணப்படும் அறிவித்தல்கள் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

வி. ரி. நவரட்ன,
பொதுமுகாமையாளர்,
இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி.

5-607/1—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

## இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி

புகையிரத முகவர் பதவி (போக்குவரவு/ரிச்மன்ட் ஹில்)

இத்திணைக்களத்தில் புகையிரத முகவர் (போக்குவரவு) ரிச்மன்ட் ஹில் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிகக் குறைந்த தரகாக ரூபா 160/- வழங்கப்படும். இந் நிலையம் கரையோர இருப்புப்பாதையில் கின்தோட்டை புகைவண்டி நிலையத் திற்கும் காலி புகையிரத நிலையத்திற்குமிடையில் அமைந்துள்ளது.

இம் முகவர் நிலையம் அமைந்திருக்கும் சுற்றுடலில் வசிக்கும் அல்லது கூறப்பட்ட அச்சுற்றுடலில் உரிமையளித்த நலன்களைக் கொண்டிருக்கும் ஆண்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்திலன்று 21 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இரு தடவைகளுக்கு மேற்படாத தோற்றிய கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியும், எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது வர்த்தக கணிதமும் உட்பட குறைந்தது ஆறு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, மருதானை, கொழும்பு-10 என்னும் முகவரியிற் பெறக்கூடியதாகவுள்ள விண்ணப்பப்படிவங்களில் நிரப்பப்பட்டு 12.06.1973 ல் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக மேற்கூறப்பட்ட முகாமையாளரின் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களுக்காகிய கோரிக்கைகள் யாவும் முத்திரை இடப்பட்டதும், சொந்த முகவரியிடப்பட்டதுமான ஒரு கடிதவுறை (9"×4") யுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும். இத்தகைய கோரிக்கைகளைக் கொண்டிருக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "புகையிரத முகவர் (போக்குவரவு) ரிச்மன்ட் ஹில் பதவிக்காகிய விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் தேவைப்பட்ட விபரங்களைக் கூறப்பட்ட பொது முகாமையாளரது அலுவலகத்திலோ அல்லது அப் பிரதேசத்திலுள்ள பொது நிறுவனங்களிற் காணப்படும் அறிவித்தல்கள் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

வி. ரி. நவரட்ன,
பொதுமுகாமையாளர்,
இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி.

5-607/2—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

---

## தேசிய நூதனசாலைத் திணைக்களம்

உதவி நூலகப் பொறுப்பாளர் (III ஆம் தரம்)

தேசிய நூதனசாலைத் திணைக்களத்தில் மேற்குறித்த பதவிக்காக இலங்கைப் பிரசைகளாயுள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்து இத்தால் விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்து, 1973.06.09 தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் அதிபர், தேசிய நூதனசாலைத் திணைக்களம், தபால் பெட்டி 854, கொழும்பு 7 என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு.**—விண்ணப்பப்பத்திரங்கள் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ, தாமதமாகிவிட்டதாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

2. **வேதனமும் படிகளும்.**—வருடமொன்றுக்கு ரூபா 6,600—180×8—8,040 ஐக் கொண்ட திரட்டிய வேதன அளவுத் திட்டத்தையுடையது. ரூபா 7,500 க்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு.

**குறிப்பு.**—(1) 1969.10.01 ஆம் திகதிக்கு முன் இந்த வேதன அளவுத் திட்டத்துக்கு உரியதாயிருந்த தொடக்க வேதன அளவு ரூபா 3,900—180×8—ரூபா 5,340 ஆகும்.

(2) தற்போது சேவையில் உள்ளவர்களும் III ஆம் தரத்துக்குரிய வேதன அளவுத் திட்டத்தில் அமர்த்தப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்கள் அவர்களின் தற்போதைய உச்ச வேதனத்தருகில் அதற்கு மேலுள்ள வேதனப்படியைக் கடந்து செல்வதற்கு முன் இலங்கை நூலகச் சங்கத்தின் இடைத் தேர்வுப் பரீட்சையில் அல்லது அதற்கு நிகரான பரீட்சையொன்றில் சித்தியடையும்படி கேட்கப்படுகிறார்கள்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.**—இந்தப் பதவி நிரந்தரமானது. நியமனம் ஏற்பாட்டு நிதியத்தின் பேரில் அமையும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தற்பொழுது ஓய்வூதியத்துடன் கூடிய அரசாங்கப் பதவி வகிக்காதவராயிருந்தால் அவர்/அவள் தன்னுடைய வேதனத்தில் நூற்றுக்கு ஆறு வீதத் தொகையை அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்துக்கு உதவு தொகையாகச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தின் உதவு தொகை வேதனத்தின் நூற்றுக்கு ஒன்பது வீதமாகும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நியமனத் திகதியன்று அரசாங்க சேவையில் ஓய்வூதியத்துடன் கூடிய பதவி வகிப்பவராயிருந்தால் அவர்/அவள் தொடர்ந்து அந்த ஓய்வூதியத்துக்கு உரித்துடையவராவார். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தற்பொழுது அரசாங்க சேவையைச் சேராதவராயிருந்தால் ஆரம்பத்தில் மூன்று வருடம் தகுதிகாண் காலத்தில் அமர்த்தப்படுவார். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவி வகிப்பவராயிருந்தால் அவர்/அவள் ஒரு வருடகாலத்துக்குப் பதில் உத்தியோகத்தராகவே நியமிக்கப்படுவர்.

4. **தகைமைகள்.**—(அ) விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் தினத்தில் 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல். (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

(ஆ) நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராயிருத்தல்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தலும், இலங்கை நூலகச் சங்கத்தின் இடைத்தேர்வுப் பரீட்சையில் அல்லது கனிட்ட பல்கலைக்கழகமொன்றில் நூலகவியல் (நூலகப் பொறுப்பாளர்) துறையில் டிப்ளோமா அல்லது அதற்கு நிகரான தகைமை பெற்றிருத்தலும்.

(ஈ) மேலே (இ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் 10 வருடச் செயல்முறை அனுபவமும் இருத்தல்.

(உ) சிங்களம், ஆங்கிலம் என்பவற்றுடன் யாதேனுமொரு இயற்கையியல்/கீழ்த்திசை மொழி பற்றியும் சிறந்த அறிவு பெற்றிருத்தல்.

**குறிப்பு.**—சிரேட்ட பாடசாலை சான்றிதழ் அல்லது அதற்குச் சமனை அல்லது அதனிலும் உயர்ந்த சான்றிதழுடன் இலங்கை நூலகச் சங்கத்தின் இடைத் தேர்வுப் பரீட்சையில் அல்லது கனிட்ட பல்கலைக்கழகத்தில் நூலகவியல் (நூலகப் பொறுப்பாளர் பதவி) துறையில் டிப்ளோமா அல்லது அதற்கு நிகரான தகைமையுடன் 10 வருடச் செயல்முறை அனுபவமுடைய இந்தத் திணைக்களத்து ஊழியர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

5. கீழ்க்காணும் சாதனங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கேட்கும் பட்சத்தில் விண்ணப்பதாரர் அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (**கவனிக்க**.—சமயத் தீட்சைச் சான்றிதழோ உதவி பெறும் பாடசாலை ஒழுங்கு விதிக்கோவைத் தேவை நோக்கில் வழங்கப்பெற்ற சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) (இ) பிரிவில் குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ்.

(இ) செயல் முறை அனுபவம் பற்றிய சான்றிதழ்.

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகளின் சான்றிதழ்.

(உ) அண்மையில் பெற்றுக் கொண்ட குணச்சான்றிதழ்கள் இரண்டு.

**குறிப்பு.**—(1) விண்ணப்பப் பத்திரத்துடன் எந்த ஒரு சாதனத்தையோ, பிரதியையோ இணைத்தனுப்புதலாகாது.

(2) கேட்கப்படும் பொழுது சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பப் பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தத்தமது விண்ணப்பப் பத்திரங்களை திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பப் பத்திரத்தையும் அதனுடன் தொடர்புடைய சாதனங்களையும் தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் அதிபருக்கு அனுப்புதல் வேண்டும். அவற்றை திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் எவரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்புதலாகாது.

8. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதற்கும் முக்கியமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கத்தையுடைய அரசகரும மொழிச் சட்டத்தின் விதிகளைச் செயற்படுத்துதற்கும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஏற்படுத்தப்படவுள்ள எந்த ஒரு விதிக்கும் இணங்கி நடப்ப தற்கும் தயாராயிருத்தல் வேண்டும்.

இந்த வர்த்தமானியின் I ஆம் பாகத்தின் (IIஅ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள, அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளை வாசித்துப் பார்த்தல் நலமுடைத்து.

பி. எச். டி. எச். டி சில்வா,
அதிபர்,
தேசிய நூதனசாலை.

தேசிய நூதனசாலைத் திணைக்களம்,
தபால் பெட்டி 854,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு மே மீ 08 ந் உ.

## மாதிரிப் படிவம்

(கவனிக்க .—$8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவுடைய கடதாசியில் அமைவதோடு விண்ணப்பப் பத்திரத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " உதவி நூலகப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம் " என்று குறிப்பிட்டு பதிவுத்தபாலில் தேசிய நூதன சாலைத் திணைக்களத்தின் அதிபருக்கு அனுப்புதல் வேண்டும்).

### தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் உதவி நூலகப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பப்பத்திரம்

1. பெயர் :————.
(முதலெழுத்துடன்) திரு/திருமதி/செல்வி :————.

2. முழுப்பெயர் :————.

3. விலாசம் :————.

4. (அ) இலங்கைப் பிரசையா :————.

(ஆ) அவ்வாறுனல் வம்சாவழி மூலமா ? பதிவு செய்ததன் மூலமா ? வம்சாவழி மூலமெனின் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடுக :—

(1) விண்ணப்பதாரர் :————.

(2) விண்ணப்பதாரரின் தந்தை :————.

(3) விண்ணப்பதாரரின் தந்தையின் தந்தை :————.

(4) விண்ணப்பதாரரின் தந்தையின் தந்தையின் தந்தை :
————.

5. பிறந்த திகதி :———— வருடம் :———— மாதம் :————.

6. விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தில் வயது :—

வருடம் :————, மாதம் :————. திகதி :————,

7. திருமணமானவரா ? திருமணமாகாதவரா ?:————.

8. கல்வித் தகைமை :————.

| பரீட்சை/பட்டம் | வருடம் | விடயம் |
|---|---|---|
| | | |

9. செயல் முறை அனுபவம் :—

| வகித்த பதவியும் தொழிலின் தன்மையும் | சேவைபுரிந்த இடம் | காலப்பகுதி |
|---|---|---|
| | | |

10. தற்பொழுது வகிக்கும் பதவி பற்றிய விபரம் :—

(அ) பதவி :————.

(ஆ) திணைக்களம்/நிறுவனம் :————.

(இ) நியமனத் திகதி :————.

(ஈ) நிரந்தரமானதா ? ஓய்வூதியமுடையதா ? தற்காலிகமானதா?
————.

(உ) பதவி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா ?:————.

(ஊ) வேதன அளவும் தற்பொழுது கிடைக்கும் வேதனமும் :————

11. உங்களைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய இருவருடைய பெயர்களும் விலாசங்களும் :—

(1) ————.

(2) ————.

12. வேறு விவரங்கள் :————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னுல் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதெனவும், சரியானதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்குள்ள தகவல்களில் ஏதாவதொன்று பொய்யானதென்றே பிழையானதென்றே என்னைத் தெரிவு செய்வதற்கு முன் தெரிந்தால் நான் தகுதியிழந்தவனுவேன், என்பதும் நியமனத்தின் பின் தெரிந்தால் நட்டாடு எதுவுமின்றி நான் சேவையிலிருந்து விலக்கப் படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

### விண்ணப்பதாரி அரசாங்க சேவையைச் சேர்ந்தவராயிருந்தால் அவர்/அவள் பற்றி திணைக்களத் தலைவரின் அறிக்கை

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

5—605—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை—1974 ஆம் ஆண்டு தொடக்கம்

1974 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் நடாத்தப்படவிருக்கும் மேற்கூறிய ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கான பரீட்சைத் திட்டத்தை மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அப்பரீட்சைத் திட்டம் பின்வருமாறு :—

(1) **பொது அறிவுப் பரீட்சை.**—பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாக நியாயமறியும் சக்தியையும், வாய்மொழியாகவும், வாய்மொழியற்றும் உள்ள சந்தர்ப்பத்தில் கொடுக்கப்பட்ட செய்தியிலிருந்து இடமான முடிவுகளை எடுக்கும் ஆற்றலையும் மதிப்பிடுவதற்கான 60 நிமிடங்களைக் கொண்ட ஒரு வினாத்தாள். அவ்வினாத்தாள் "பல்வேறு தெரிவு" வினாக்களைக் கொண்டிருக்கும். 200 புள்ளி

(2) **கிரகித்தல்.**—நுண்ணறிவுடன் வாசித்து விளங்கக் கூடிய ஆற்றலைச் சோதிப்பதற்கான 90 நிமிடங்களைக் கொண்ட வினாத்தாள். ஒரு தொகுதியான சிறு பந்திகள் கொடுபடும். சில பந்திகளைப் பொறுத்த வரையில் மாற்றாக கூற்றுக்கள் பரீட்சார்த்திக்குக் கொடுபடும் அக்கூற்றுக்களில் ஒன்று அப்பந்தியிற் கூறப்பட்டனவுடன் சிறப்பாகப் பொருந்தும். மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரியுமாறு வேண்டப்படுவர். ஏனைய பந்திகளைப் பொறுத்தவரையில் பந்திகளின் கருத்தை எவ்விதம் கிரகித்துள்ளார் என்பதனை அறியுமுகமாக வினாக்கள் கொடுக்கப்படும். 100 புள்ளி

(3) **வழக்குக் கல்வி.**—இப்பரீட்சை பரீட்சார்த்தியின் திடமாக யோசிக்கும் சக்தியையும், பிரச்சினை தீர்க்கும் ஆற்றலின் சக்தியையும் அறிவதற்காயது. தீர்வு காணத் தேவைப்படும் பிரச்சினை அல்லது பிரச்சினைகளைக் கொண்ட சந்தர்ப்பங்கள் பரீட்சார்த்திக்குக் கொடுபடும். இது 2 மணித்தியாலங்களுக்கு நடைபெறும்—வினாத்தாளையுடையது. 100 புள்ளி

(4) **வாய்மொழிப் பரீட்சை.**—வாய்மொழிப் பரீட்சையின் நோக்கம் யாதெனில் காண்பிக்கப்பட்ட தலைமை தாங்கி நடத்துவதற்கான—பரீட்சார்த்தியின் திறமையையும் அவரின் சேவைப் பதிவையும் மதிப்பிடுவதற்காகும். திறமையான சேவையுடைய உத்தியோகத்தர்களின் சேவைக்கு நன் மதிப்புக் கொடுபடும். வாய்மொழிப் பரீட்சை நடத்தும் சபைக்கு பரீட்சார்த்திகளினால் எழுத்துப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகள் கொடுபடமாட்டாது. 200 புள்ளி

செயலாளர்,
அரசாங்க நிருவாக உள்ளூராட்சி
உண்ணாட்டலுவல்கள் அமைச்சர்.

அரசாங்க நிருவாக உள்ளூராட்சி
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
டொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
மே 15, 1973.

5-665—25.05.73 ந் திகதி வர்த்தமானி இல. 61

---

இல. 76/1/12 (எம்சி)

## இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை—1972

### திருத்தம்

1972 டிசெம்பர் மாதம் 08 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்கூறிய பரீட்சை சம்பந்தமான அறிவித்தல் 1973 சனவரி 05 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி திருத்தப்பட்டமை மீண்டும் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது :—

**வாய்மொழிப் பரீட்சை**

பின்வருவனவற்றை, வாய்மொழிப் பரீட்சை சம்பந்தமான அறிவித்தலின் 10 ஆப் பந்தியின் உபபந்தி (vi) முடிவுடன் சேர்க்கவும் :—

"வாய்மொழிப் பரீட்சையின் நோக்கம் பரீட்சார்த்தியினால் வெளிப்படுத்திக் காட்டிய தலைமை தாங்கி நடத்தும் திறமையையும் சேவையின் பதிவையும் மதிப்பிடுவதற்கே அபேட்சகர்களின் சேவைப் பதிவு போற்றத்தக்கதாயிருந்தால் அப்படியான சேவைக்குச் சிறப்புக் கொடுக்கப்படும்.

எழுத்துப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் எடுத்த புள்ளிகள் வாய்மொழிப் பரீட்சை நடாத்தும் சபைக்குக் கொடுபடமாட்டாது."

பி. எச். சிறிவர்தன,
பதிற் செயலாளர்,
அரசாங்க நிருவாக உள்ளூராட்சி
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாக உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
1973, மே 15 ஆந் தேதி.

5-654—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

---

### பரீட்சைத் திணைக்களம்

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை—1973

மேற்படி பரீட்சைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் 1973 ஜூலை மாதம் 10 ஆம் திகதி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. **பாடசாலை விண்ணப்ப அட்டவணைகள்**

1972 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதப் பரீட்சைக்கு பரீட்சார்த்திகளைத் தோற்றுவித்த சகல பாடசாலைகளுக்கும் 1973 ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரவேச அட்டவணைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். 20.06.1973 வரையில் பிரவேச அட்டவணைகள் கிடைக்கப்பெறாத பாடசாலைத் தலைமை ஆசிரியர்கள், தமது பாடசாலையிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு, இவ்வலுவலகத்துடன் தொடர்புகொண்டு பிரவேச அட்டவணைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

முதற் தடவையாகப் பரீட்சார்த்திகளைத் தோற்றவிருக்கும் பாடசாலைத் தலைவர்கள், க.பொ.த.ப. (சாதாரணதர) வகுப்பு நடாத்துவதற்கு பிரதேசக் கல்வி அதிகாரியினால் அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியுடன் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையையும் குறித்து இத் திணைக்களத்திற்கு எழுதி பிரவேச அட்டவணைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. **தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்காய விண்ணப்பப் படிவங்கள்**

**1973 ஜூன் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இடதுபக்க மேல் மூலையில் "எஸ் 2" எனக் குறிப்பிடப்பட்டதும்** சொந்த முகவரியிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான நீண்ட தபாலுறையினை அனுப்பி இவ்விண்ணப்பப் படிவங்களைத் தபால்மூலம் பெற்றுக்கொள்ளலாம். இத் தபாலுறைகளுள் எவ்வித கடிதங்களேனும் வைத்து அனுப்பலாகாது. இவ் விண்ணப்பப் படிவங்களை 1973 ஜூலை 04 ஆம் திகதியிலிருந்து 09 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில், இவ் வலுவலகத்திலிருந்து நேரில் பெற்றுக்கொள்ளலாம். ஒரு பரீட்சார்த்திக்கு ஒரு விண்ணப்பப் படிவம் மட்டுமே வழங்கப்படும்.

4. **பழைய விண்ணப்பப் படிவங்களை இப் பரீட்சைக்குப் பாவிக்கலாகாது.**

பாடசாலைப் பரீட்சார்த்திகளினதும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளினதும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் 1973 ஜூலை மாதம் 10 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பரீட்சை 1973 டிசெம்பர் 11 ஆம் திகதி ஆரம்பமாகும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு 2,
1973.05.10.

5-655—25.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 61

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| மே | .. | 4.5.73 | வெள்ளி | .. | 25.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | | 11.5.73 | வெள்ளி | .. | 2.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | | 18.5.73 | வெள்ளி | .. | 9.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | | 25.5.73 | வெள்ளி | .. | 15.5.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| யூன் | .. | 1.6.73 | வெள்ளி | .. | 23.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | | 8.6.73 | வெள்ளி | .. | 30.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | | 14.6.73 | வியாழன் | .. | 6.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | | 22.6.73 | வெள்ளி | .. | 13.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | | 29.6.73 | வெள்ளி | .. | 20.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆ ஓகத்து மீ 18 ந உ.

இலங்கை, அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.